Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலைரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத வூல ஆனி மீ 14 ஆம் உ வியாழக்கிழமை (28 - 06 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 4 ஓசை 130

## இராணுவம் மரத்தில் ஏற்றிய வயோதிபர் இராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டார்

(வவுனியா)

இராணுவத்தினரின் மிரட்டலை அடுத்து இராணுவத்தினருக்காக இளநீர் பறிப்பதற்கு தென்னை மரத்தில் ஏறிய வயோதிபரை இராணுவவீரர் ஒருவர் சுட்டு வீழ்த்தினார்.

இச்சம்பவம் சில தினங்களுக்கு முன்னர் வவுனியா கந்தர்புரம் என்ற இடத்தில் இடம் பெற்றது.

நாகமணி சுப்பையா (வயது 60) என்ற சலவைத் தொழில் செய்து வரும் வயோதிபரைக் கைது செய்த இராணுவத்தினர் தமக்கு இளநீர் பறித்துத்தரும்படி அவரைமிரட்டினார்களாம். இளநீர் பறித்துக்கொடுத்து தப்பிக் கொள்ளஎண்ணிய அந்த வயோதிபர் தென்னை மரத்தில் ஏறினாராம். அவர் தென்னையின் உச்சிப் பகுதியை எட்டும் சமயத்தில் வேறொருபகுதி பற்றைஅருகில் மறைந்திருந்த இராணுவ வீரர் மேற்படி வயோதிபரை சுட்டு வீழ்த்தினாராம். (4ஆம் பக்கம் பார்க்க)

# நல்லூரில் அகதிகள் மீது ஹெலி தாக்கு; பலர் காயம்

# தமிழரை கொல்லும் போக்கு ஸ்ரீலங்கா அரசு நிறுத்தட்டும்

## கருணாநிதி கூறுகிறார்

(சென்னை)

யாழ் நகரில் இடம்பெற்ற விமானத்தாக்குதல் இலங்கை அரசு தனது சொந்த நாட்டு மக்களைவிமானமூலம் நேபாம் குண்டுவீசிக்கொல்வதை நிறுத்தப்படவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்தப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஏற்ற இணக்கமான சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்ற அவசியத்தையும் அவர் வலியுறுத்தி கூறினார்.

இம் மாதம் 19ஆம் திகதி இந்திய அரசு வெளியிட்ட கருத்துக்களின்படியே இருதரப்பிலும் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட வேண்டும் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்;

வடக்கு கிழக்கு பகுதிகளில் தற்போது தோன்றியுள்ள யுத்தம் காரணமாக இம்மாதம் எழுபத்தொருகுடும்பங்களைச் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 25 இளம் பெண்கள் கைது

(காரைதீவு)

காரைதீவுப்பகுதியில் புகுந்த இராணுவத்தினர் இருபத்தைந்து இளம் தமிழ் பெண்களை கைது செய்துள்ளனர்.

முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்ட இப்பெண்கள் பற்றிய விபரம் எதுவும் இன்னும் தெரியவரவில்லை (லோ)

## 5 இளைஞர்கள் சுட்டுக்கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தாளையடிப் பகுதியில் ஐந்து தமிழ் இளைஞர்களை சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இவர்கள் சுட்டுக் கொல்லப் பட்டதுடன் இவர்களுடைய சடலம் அனாதரவாக கைவிட்டுச் சென்றதுடன் இச்சடலங்கள் நெடுநேரமாக வீதி ஓரத்தில் கிடக்கக் காணப்பட்டது. (லோ)

## அகதி முகாம்கள் இருளில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு – கிழக்குப் பகுதிகளில் அமைந்துள்ள அகதி முகாம்கள் இரவு நேரங்களில்

## இருவர் கால்களை இழந்தனர்

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலை, மட்டக்களப்பு மற்றும் வெளிமாவட்டங்களிலிருந்து உயிரைப்பாதுகாத்துக் கொள்வதற்காக யாழ்ப்பாணம் நோக்கி வந்து நல்லூர் கந்தசாமி கோயில் பகுதியில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருந்த மக்கள் மீது நேற்றுமாலை சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த ஹெலிக்கொப்ரர் ஒன்று குண்டு வீசிதாக்கியதால் இருவர் கால்களை இழந்து ஊனமாகினர்; மற்றும் சிலர் படுகாயமடைந்தனர்; மொத்தம் இருபதுபேர் காயமடைந்து மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசாமி கோயிலின் பின்புறமுள்ள நல்லூர் சிவன் கோயில் வாசலில் தங்கியிருந்த அகதிகள் மீதே ஹெலிக்கொப்ரர் குண்டுவீசித் தாக்கியது.

ஜனாதிபதி பிரேமதாசாவும் இதற்கு முன்னர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா, சிறிமா பண்டாரநாயக்கா ஆகியோர் நல்லூர்க் கந்தசாமி கோவிலுக்கு வந்து வணங்கிச் சென்றிருக்கின்றனர்.

நேற்றுமாலை இதே நல்லூர்க் கந்தசாமிகோயில் பின் வீதியில் தான் சிறிலங்கா விமானப்படை ஹெலி குண்டு வீசி அகதிகளாக வந்து தங்கியிருந்த அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தியது.

நல்லூர்ச்சிவன் கோவில் முன்றலிலே அதிக எண்ணிக்கையானோர் படுகாயமடைந்துள்ளனர். இருவர் கால்களை இழந்துள்ளனர். கோவில் மண்டபம் இரத்த (4ஆம் பக்கம் பார்க்க)

## கண்ட இடங்களில் எல்லாம் மக்கள் மீது ஹெலி தாக்கு

யாழ். குடாநாட்டில் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் ஹெலிக்கொப்ரர்களிலிருந்து ஸ்ரீலங்காப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதால் மக்கள் வீதிகளுக்கு இறங்க அஞ்சுகிறார்கள்.

மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், மக்கள் கூட்டம் ஆகியவற்றைக் காணுமிடமெல்லாம் ஹெலிக்கொப்ரரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்வதும், கிறனேட், ஷெல் தாக்குதல்களும் இடம் பெறுவதால் பெண்கள், குழந்தைகள், வயோதிபர் உட்பட அப்பாவி மக்கள் பலர் கொல் (4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா இராணுவத்தில் சேர்வதற்காக சுமார் இருபத்தையாயிரம் சிங்கள இளைஞர்

## யாழ். நகரக் கடைகள் விரைவாக அப்புறப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய நகரப்பகுதி கடைகளில் இருந்து மிகத்துரிதமாக பொருட்கள் அகற்றப்பட்டு வருவது நடைபெறுகின்றது.

கடந்த திங்கட்கிழமை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் கடைகள், வர்த்தக ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் மீது அகோரத் தாக்குதலை மேற்கொண்டிருந்ததே இவ் இடமாற்றவேகம் அதிகரித்மைக்கான முக்கிய காரணமாகும்.

பஸ் நிலையப் பகுதியிலும் வைத்தியசாலை சுற்றாடல், (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரிகள் இயங்க செஞ். சங்கம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

தற்போது மூடப்பட்டுள்ள வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, கிளிநொச்சி, தெல்லிப்பளை ஆகிய அரசினர் வைத்தியசாலைகளை மீண்டும் இயங்கச் செய்வதற்கு செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் துரித நடவடிக்கைஎடுத்து வருகின்றனர்.

கொழும்பில் இருந்து நாளை வரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க முக்கியஸ்தர்களுடன் இதுபற்றி ஆலோசி (4 ஆம் பக்கம் பார்க்க)

## நூற்றுக்கு மேல் தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பு நகரின் பல்வேறு இடங்களில் நேற்று சுமார் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெற்கில் தமிழ் போராளிகள் தாக்குதல்களை நடாத்தலாம் என்று அப் பகுதிகளுக்கு வருவதாகக் கிடைத்த தகவல்களையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பாடசாலை மீது விமானத் தாக்ததல்

(திருக்கோணமலை)

தோப்பூர், பள்ளிக் குடியிருப்பு பகுதிகளில் உள்ள தமிழ்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தாளையடிப் பகுதியில் ஐந்து தமிழ் இளைஞர்களை சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் இவர்களுடைய சடலம் அனாதரவாக கைவிட்டுச் சென்றதுடன் இச்சடலங்கள் நெடுநேரமாக வீதி ஓரத்தில் கிடக்கக் காணப்பட்டது. (லோ)

## அகதி முகாம்கள் இருளில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு – கிழக்குப் பகுதிகளில் அமைந்துள்ள அகதி முகாம்கள் இரவு நேரங்களில் இருளில் மூழ்கியுள்ளன. இதனால் அகதிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

போதியளவு அரிக்கன் லாம்புகள் தம்மிடம் இருந்தபோதி

(4ஆம் பக்கம் பார்க்க)

## 13ஆம் கட்டையில் மூவர் பலி

(திருக்கோணமலை)

திருக்கோணமலை பதின் மூன்றாம்கட்டை அருகேஇராணுவத்தினர் அடித்த செல் ஒன்று வீழ்ந்ததில் ஒரு அரிசி ஆலைக்குள் இருந்த மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இம்மூவரும் அரிசி ஆலைக்குள் தொழிலாற்றும் தொழிலாளர்கள் எனவும் தெரிய வருகிறது. (லோ)

## சிறிலங்கா அரசின் கூற்று இது

(கொழும்பு)

யாழ். கோட்டைப் பகுதியிலுள்ள விடுதலைப்புலிகளின் நிலைகள் யாவும் அழிக்கப் பட்டுவிட்டதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளால் முற்றுகை இடப்பட்டிருக்கும் கோட்டை முகாம் இராணுவத்தினருக்கு உணவு வசதியோ வேறு மருத்துவ வசதிகளோ அளிக்க முடி

(4 ஆம் பக்கம் பார்க்க)

ருந்த அகதிகள் மீதே ஹெலிக்கொப்ரர் குண்டுவீசித் தாக்கியது.

ஆகியோர் நல்லூர்க் கந்தசாமி கோவிலுக்கு வந்து வணங்கிச் சென்றிருக்கின்ற

## கண்ட இடங்களில் எல்லாம் மக்கள் மீது ஹெலி தாக்கு

யாழ். குடாநாட்டில் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் ஹெலிக்கொப்ரர்களிலிருந்து ஸ்ரீலங்காப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதால் மக்கள் வீதிகளுக்கு இறங்க அஞ்சுகிறார்கள்.

மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், மக்கள் கூட்டம் ஆகியவற்றைக் காணுமிடமெல்லாம் ஹெலிக்கொப்ரரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்வதும், கிறனேட், ஷெல் தாக்குதல்களும் இடம் பெறுவதால் பெண்கள், குழந்தைகள், வயோதிபர் உட்பட அப்பாவி மக்கள் பலர் கொல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தால் பொதுமக்கள் கேடயமாகப் பாவிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கோமர் முகாமிலிருந்து அக்கரைப்பற்று முகாமிற்கு சென்று கொண்டிருந்த சிங்கள இராணுவம் பெரும் திரளான பொது மக்களை முன்னும் பின்னும் கேடயங்களாகப் பிடித்துச் சென்றுள்ளது.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட தமிழ், முஸ்லிம் ஆகிய இரு சமூகத்தையும் சேர்ந்த ஆண்கள் அடங்குவர் எனவும் தெரியவருகிறது. (லோ)

## வர்த்தக சங்கம் பணம், பொருள் சேகரிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் அகதிகளுக்கான உணவுப் பொருட்களையும், பணத்தையும் சேகரித்து வருகிறது.

சாவகச்சேரிப்பகுதி வர்த்தகநிலையங்களிலிருந்து இது வரை உணவுப் பொருட்கள் பணம் உட்பட சுமார் இருபதினாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களும், பணமும் சேகரிக்கப்பட்டுள்ளதாக வர்த்தகர் சங்கத் தலைவர் ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

மட்டு. இருந்து யாழ். வந்த

## பஸ் மீது ஹெலி தாக்குதல் ஆஸ்பத்திரியில் ஆசிரியர்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சி கலாசாலை பயிற்சி ஆசிரியையான கொடிகாமத்தைச் சேர்ந்த ஜெகதீஸ்வரி கும்புறுமுனையில் வைத்து ஹெலிகப்டர் தாக்குதலுக்குஉள்ளாகி காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருடன் எழுபத்தைந்து பயிற்சி ஆசிரியர்கள் இம் மாதம் 15ஆம் திகதி புறப்

(4ஆம் பக்கம் பார்க்க)

விமானப்படை ஹெலி குண்டு வீசி அகதிகளாக வந்து தங்கியிருந்த அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தியது.

நல்லூர்ச்சிவன் கோவில் முன்றலிலே அதிக எண்ணிக்கையானோர் படுகாயமடைந்துள்ளனர். இருவர் கால்களை இழந்துள்ளனர். கோவில் மண்டபம் இரத்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா இராணுவத்தில் சேர்வதற்காக சுமார் இருபத்தையாயிரம் சிங்கள இளைஞர்கள் நேற்றுக்காலை கொழும்பில் உள்ள இராணுவ தலைமை அலுவலகத்திற்கு சமுகமளித்தனர்.

எதிர்வரும் சனிக்கிழமை வரை இதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

## நேற்று கொழும்பிற்கு பஸ் புறப்பாடு

(விசேட நிருபர்)

நேற்று (27-6-90) அதிகாலை மினிபஸ் ஒன்று பிரயாணிகளுடன் மானிப்பாயில் இருந்து கொழும்பு புறப்பட்டது.

ஒருவழிப் பயணக்கட்டணமாக பிரயாணி ஒருவரிடம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி தாக்குதல் இருவர் காயம்

(விசேட நிருபர்)

நேற்றுக் காலை 10.45 மணிக்குஹெலிகொப்ரர் ஒன்று யாழ்நகரம், குருநகரம், பாஷையூர், கொட்டடி பகுதிகளில் குண்டுவீச்சு, 50கலிபர் தாக்குதல்களை நடத்தியது.

மேற்படி தாக்குதலுக்கு இலக்காகி இருவர் காயம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி தாக்குதல் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் நேற்று நண்பகல் மேற்கொள்ளப்பட்ட ஹெலிகப்டர் தாக்குதலினால் சுமார் நாற்பத்தைந்து வயது மதிக்கத் தக்க குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார்.

ஹெலியில் இருந்து சூடுபட்டதும் இவர் அம்புலன்ஸ் மூலம் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கு மரணமானார்.

சுன்னாகம் பகுதியில் நேற்று பகல் ஹெலிகப்டரில் இருந்து சரமாரியாக தாக்குதல்கள் இடம்பெற்றது.

பட்டு வருவது நடைபெறுகின்றது.

கடந்த திங்கட்கிழமை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் கடைகள், வர்த்தக

மைக்கான முக்கிய காரணமாகும்.

பஸ் நிலையப் பகுதியிலும் வைத்தியசாலை சுற்றாடல்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரிகள் இயங்க செஞ். சங்கம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

தற்போது மூடப்பட்டுள்ள வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, கிளிநொச்சி, தெல்லிப்பளை ஆகிய அரசினர் வைத்தியசாலைகளை மீண்டும் இயங்கச் செய்வதற்கு செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் துரித நடவடிக்கைஎடுத்து வருகின்றனர்.

கொழும்பில் இருந்து நாளை வரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க முக்கியஸ்தர்களுடன் இதுபற்றி ஆலோசி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் இறந்தோர் தொகை ஏழாக உயர்வு

(விசேட நிருபர்)

பாதுகாப்புத்தேடி கொக்குவில் சிறிய தாய் வீட்டில் தஞ்சம் புகுந்திருந்த திருநெல்வேலி ஞா. அலெக்சாண்டர் (சற்குணம்)என்பவரது நான்கு குழந்தைகளைப் பலியெடுத்த சம்பவம் நேற்று முன்தினம் (26-6-90) இரவுஹெலிக்குண்டு வீச்சுக்குப் பலியானவர் தொகை ஏழாக உயர்ந்துள்ளது.

கொக்குவிலில் இறந்த ஏழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊழியரைக் கட்டாயமாக வேலைக்கு வர பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் உணவுத் திணைக்களக் கிளையிலும், சமூகசேவைப் பகுதியிலும் கடமையாற்றும் ஊழியர்கள் நாளை முதல் செயலகத்தில் தமது காரியாலங்களில் கட்டாயமாக ஆஜராக வேண்டும்என யாழ்.அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிறட் பணித்துள்ளார்.

இதேவேளை, இவர்களைத தவிர ஏனைய செயலக ஊழியர்கள் தாம் வதியும் பிரிவிலுள்ள உதவி அரசாங்க பணிமனைகளிலும் ஆஜராகி தமது வரவுகளைப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## கல்முனையில் தமிழர் படுகொலை 75ஆக உயர்வு

(கல்முனை)

கல்முனையில் ஜிகாத் இயக்கத்தினரும் சிறிலங்கா இராணுவத்தினரும் சேர்ந்து படுகொலை செய்த தமிழரின் எண்ணிக்கை எழுபத்தைந்தாக உயர்ந்துள்ளது.

இவர்கள் நடுவீதியில் நிறுத்தி வைத்து சுட்டுக் கொன்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த இருபத்திநான்காம் திகதி நடைபெற்றதாக அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன. (லோ)

சுமார் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெற்கில் தமிழ் போராளிகள் தாக்குதல்களை நடாத்தலாம் என்று அப் பகுதிகளுக்கு வருவதாகக் கிடைத்த தகவல்களையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பாடசாலை மீது விமானத் தாக்குதல்

(திருக்கோணமலை)

தோப்பூர், பள்ளிக்குடியிருப்பு பகுதிகளில் உள்ள தமிழ் பாடசாலைகள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் விமானத் தாக்குதல்களை நடாத்தினர்.

இப்பாடசாலையில் தங்கியிருந்த அசதிகள் நேற்றுடன் இடம்பெயர்ந்ததால் இச் சம்பவத்தில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பினார்கள்.

## 75 இளைஞர்கள் கைது

(அக்கரைப்பற்று)

கடந்த இருபத்தைந்தாம் திகதி அக்கரைப்பற்று பிரதேசத்தில் எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட இளைஞர்களை சிறிலங்கா இராணுவம் கைது செய்து தமது முகாம்களுக்கு அழைத்து சென்றுள்ளது. (லோ)

## சண்டை தொடர்கிறது

(புதுடில்லி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்தும்சண்டைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக ஸ்ரீலங்கா இராணுவஅதிகாரிகள் கூறியதாக அகில இந்திய வானொலி அறிவித்தது.

இப்பகுதிகளில் உணவு, மின்சாரம் குடிநீர் என்பனவற்றின் விநியோகம் தடைப்பட்டுள்ளதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது.

# திருமலை மக்களின் அவலம்; மகனைக் கடலில் தவறவிட்ட தாய்

(முல்லைத்தீவு)

சிங்கள இராணுவத் தாக்குதலால் திருக்கோணமலையை விட்டு படகுகள் மூலம் வெளியேறிக்கொண்டிருந்த மக்கள் மீது சிறிலங்கா ஹெலிகொப்டர் தாக்கிய பொழுது படகு ஓட்டையானதை தொடர்ந்து அந்தப்படகிலிருந்து இன்னுமோர் படகுக்கு அதில் பயணம் செய்தோர் மாறும் பொழுது ஒருதாய் தனது ஒன்பது மாதக் குழந்தையைக் கை தவறிக் கடலில் போட்டுவிட்டார். ஹெலியின் அகோரத் தாக்குதலால் உடன் அந்தப் பகுதியை விட்டு அகல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதால் சிறுவனைக் கடலிலேயே விட்டுவிட்டுச் செல்லவேண்டி ஏற்பட்டது.

தற்போது இந்தத் தாய் முல்லைத்தீவு கடற்கரையில் தனது பிள்ளை தன்னிடம் வரும் என்று அழுதவண்ணம் நம்பிக்கையுடன் காத்திருப்பதாக அங்கிருந்து வந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேபோல் திருக்கோண

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வயோதிபர் இல்லத்தின் மீது ஹெலிக்கொப்டர் குண்டு வீச்சு

(விசேட நிருபர்)

கொழும்புத்துறை வயோதிபர் விடுதிக்கும் நேற்று முன்தினம் (26 6. 90) செவ்வாய் இரவு ஹெலி குண்டு வீசியது. 60 இருபாலான வயோதிபர்கள பராமரித்து வரும் சிஸ்ரர்மார் அறுவர் மயிரிழையில் உயிர் பிழைக்க நேர்ந்தது.

இச் சம்பவத்தில் சமையல் பணியில் ஈடுபட்ட செல்வி ம. மரியஸ்ரெல்லா (வயது18) செல்வி பேதுறு சாந்தா (வயது 24) ஆகிய இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் யாழ். கடற்கரை வீதி ஹோலிகுறோஸ் வைத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை குண்டு வீச்சுக்கு இலக்கான வயோதிபர் இல்லத்திற்கு சமீபமாக குருநகரில் இருந்து இடம் பெயர்ந்து சென்றுள்ள 400 குடும்பங்கள் தஞ்சமடைந்திருக்கும் கொழும்புத்துறை சென். யோசப் வித்தியாலய

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

குருநகர் சந்தைக்கும், முத்திரைச் சந்திக்குமிடையில் இரண்டு கோர்வைத் திறப்புக்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள், S. யேம்ஸ் ஆசிரியர், ஜமுனாரி, முத்திரைச் சந்தி, நல்லூரில் ஒப்படைத்தால் ரூ. 200/- வீதம் சன்மானம் வழங்கப்படும்.

(R-386)

### உங்கள் கிணற்றில்

நீர் போதாதா? காவி நீரா? உப்பு நீரா? மேற்படி பிரச்சினைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். றொக் எஞ்ஜினியர்ஸ், பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

(R-385)

## அபிவிருத்திக்கு 1லட்சம் ரூபா

(கொழும்புத்துறை)

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையின் பெரும்பாலான திருத்தவேலைகளுக்காக ஒரு லட்சம் ரூபா நிதி ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என மேற்படி பாடசாலை அதிபர் திரு. இ. வல்லிபுரம் தெரிவித்துள்ளார். (24)

## பளை மாணவர் இரத்ததானம்

(பளை)

பளை மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்கள் இரத்த தானம் செய்தனர். இதேபோல இங்குள்ள மக்களில் சிலரும் இரத்ததானம் செய்தனர்.



## வடிவேல் சுவாமிகள் சமாதியானார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரமம் தவத்திரு வடிவேல் சுவாமிகள் நேற்று அதிகாலை மகா சமாதி அடைந்துள்ளார். சுவாமிகளின் சமாதி பூசைகள் இன்று மாலை 3 மணிக்கு மேற்படி ஆச்சிரமத்தில் நடைபெறும்.

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவாமிகள் தமது இளம் வயதிலேயே தவத்தினை மேற்கொண்ட பக்தியினால் கந்தர்மடம் வேதாந்த மடத்தில் சேர்ந்து மகாதேவ சுவாமிகளிடம் முறையாக வேதாந்தம், சைவ சித்தாந்தம் ஆகியவற்றைக் கற்றார்.

பின் கிளிநொச்சிக்குச் சென்று காட்டை அழித்து அழகான ஆச்சிரமத்தை அமைத்து சைவத்தையும், தமிழையும்வளர்த்து வந்தார். பல சீடர்களையும் உருவாக்கினார்.

## மூன்று தினங்கள் மட்டும் படகுச் சேவை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு - குறிகட்டுவான் மோட்டார் படகுச் சேவை வாரத்தில் மூன்று தினங்கள் மட்டும் நடைபெறுமென அறிவிக்கப்படுகின்றது. திங்கள், புதன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் படகுச் சேவை நடைபெறமாட்டாது.

## இலவச மலசலகூடம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சுமார் 58 சனசமூக நிலையங்களுக்கு தலா 5 மலசலகூடங்கள் வீதம் சர்வோதய சிரமதான இயக்கம் இலவசமாகக் கட்டிக்கொடுக்கும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சர்வோதய சிரமதான இயக்கத்தின் பாலர் பாடசாலைகள் அமைந்துள்ள கிராமங்களுச்கும் தலா 5 மலசலகூடங்கள் வீதம் கட்டிக் கொடுக்கப்படும்.

## பதுங்கு குழிகள்

(ஈச்சமோட்டை)

விமானக்குண்டு வீச்சிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கானபதுங்கு குழிகளை அமைக்கும் வேலை இப்பகுதியில் மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

பணவசதியுள்ளவர்கள் கூலிகளைக் கொண்டு இக்குழிகளை அமைத்து வருவதுடன் வசதியற்றவர்கள் கூட்டடிப் படையில்பதுங்குகுழிஅமைப்பு வேலைகளை மேற்கொண்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. (43)

## வவுனியாவில் சகல அலுவலகங்களும் ஸ்தம்பிதம்

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் கடந்த 13 ஆம் திகதியிலிருந்து இது வரை எந்தவொரு அலுவலகங்களும் இயங்கவில்லை.

இராணுவத்தினரின் அட்டூழியங்களுக்கு அஞ்சி இப்பகுதி அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்களில் பலர் அகதிகளாகவும், வேறு இடங்களுக்குப் பாதுகாப்புத் தேடியும் சென்றுள்ளனர்.

கடந்த சில வாரங்களாக வவுனியா நகரம் வெறிச்சோடிக் காணப்படுகிறது. ஷெல் பிரயோகங்களினால் பல அலுவலகக் கட்டிடங்களும், கடைகளும் சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

இராணுவத்தினராலும், கொள்ளையர்களினாலும் சுமார் ஐம்பது கடைகளும், அதே அளவிலான வீடுகளும் உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வீடுகளிலும், கடைகளிலும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடும் இராணுவத்தினர் தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப் பெட்டி, டெக் போன்ற பெறுமதியான பொருட்களை அபகரித்துக் கொண்டு கொள்ளையடித்த கடைகளை நோக்கியும், வீடுகளை நோக்கியும் குண்டுகளை வீசிவிட்டுச் செல்கின்றனராம். (தி)

## கரைதட்டிய கடற்படைப் படகு

(நயினாதீவு)

நயினாதீவு தென்கரைக் கடலோரமாகக் கடற்படைக்குச் சொந்தமான இயந்திரப் படகு தரைதட்டிக் கரையொதுங்கியுள்ளது.

அதனை மீட்பதற்காகக் கடற்படைப் படகுகள் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. தொடர்ந்தும் அதனை மீட்கும் வேலையிலும் அதனைப் பாதுகாக்கும் பணியிலும் கடற்படையினர் நயினாதீவுத் தென்கரையில் முயற்சியைத் தொடர்கின்றனர். (62)

## வெளிநாட்டுப் பாஸ்போட் உடையோர் வெளியேற முயற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கையரான சுமார் 50 பேர் வெளிநாடுகளில் வாழ்ந்த காரணத்தால் மலேசியா போன்ற நாடுகளின் கடவுச் சீட்டுகளுடன் யாழ்ப்பாணத்திலுள்ளார்கள். இவர்கள் தற்போது யாழ்குடாநாடெங்கும் நிலவும் பதற்றநிலை காரணமாக மனிதநேய ஸ்தாபனங்களின் உதவியுடன் வெளிநாடுகளுக்குச் செல்லமுயற்சிப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## அரிசி கையிருப்பில் உள்ளது; ஆனால் பெறமுடியாது உள்ளது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை களஞ்சிய அறையில் தற்போதைக்கு தேவையான அரிசி கையிருப்பில் உள்ளது. ஆனால் அப்...

இதனாலேயே வடபகுதியில் அரிசி தட்டுப்பாட்டில் உள்ளது. தற்போதைய அரிசித் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக ...

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



இந்திய முன்னாள் பிரதமர் மொரார்ஜிதேசாய் கூறிய உண்மைக் கதை

## ஆசிரியருக்கு அடித்ததனால் மாணவன் திருந்தினான்...?

பாடசாலை ஆசிரியர் ஒருவர் தமது வகுப்பு மாணவர்களுக்குத் தாம் கற்பித்த பாடங்களில் சில வினாக்களைக் கொடுத்து மறுநாள் செய்து வரும்படி கூறினார்.

மறுநாள் ஒரே ஒரு மாணவனைத் தவிர மற்றைய மாணவர்கள் யாவரும் ஆசிரியர் கொடுத்த வினாக்களுக்கு ஒழுங்காக விடை எழுதி வந்திருந்தார்கள்.

ஆசிரியர் விடை எழுதிக் கொண்டு வராத மாணவனைப் பார்த்து ''நீ ஏன் வீட்டுப்பாட வேலையினைச் செய்து வரவில்லை?'' எனக் கேட்டார், 'என்னால் முடியவில்லை. எனவேதான் விடை எழுதி வரவில்லை என மாணவன் விரைவாகப் பதில் கூறினான்.

பிரம்பு ஒன்று எடுத்து வரும்படி அந்த மாணவனையே ஆசிரியர் அனுப்பினார். வீட்டுப்பாட வேலை செய்து வராததற்காக ஆசிரியர் தன்னை அடிக்கப் போகின்றாரோ! என்ற பீதியுடன் அம் மாணவன் பிரம்பை எடுத்து வந்து கொடுத்தான்.

ஆனால் அம் மாணவனும் சகல மாணவர்களும் எதிர் பார்த்ததற்கு மாறாக அந்த ஆசிரியர் நடந்து கொண்டார். அந்தப் பிரம்பை மீண்டும் மாணவனிடம் கொடுத்தார். தனது கரத்தை நீட்டினார். ''தான் கற்பிக்கும் போது உன்னை சரியாக கவனிக்கவில்லை என தற்போது உணர்கின்றேன் எனவே குற்றம் என்னுடையது இந்தப் பிரம்பினால் இரண்டு அடிகள் எனக்குக் கொடு' என்றார். மாணவன் திகைத்தான் சக வகுப்பு மாணவர்கள் ஆசிரியரை உன்னிப்பாகப் பார்த்தவாறு அமைதியாக இருந்தார்கள். குறிப்பிட்ட மாணவன் ஆசிரியரை அடிக்க மறுத்தான்.

ஆனால் ஆசிரியர் விடவில்லை. ஆசிரியர் வற்புறுத்திய போது ''ஐயா! நான் எப்படி உங்களை அடிப்பேன்?'' என்று பரிதாபமாகக் கூறினான்.

அதற்கு ஆசிரியர் ''நீ அப்படிச் செய்யாவிட்டால் நான் செய்த தவறு எப்படி உன் நினைவில் நிற்கும்? இரண்டு அடிகள் கொடு'' என்று கூறி தனது கையை நீட்டி வற்புறுத்திக் கட்டளையிட்டு அந்த மாணவனைக் கொண்டு பிரம்பினால் இரண்டு அடிகள் வாங்கிக் கொண்டார்.

ஆனால் அந்த மாணவனோ, பலாத்காரமாகத் தான் ஆசிரியருக்கு அடிக்க வேண்டி நேரிட்டதே! என்ற கவலையினால் ஆசிரியருடைய காலில் வீழ்ந்து தேம்பித் தேம்பி அழுதான். அன்று தொடக்கம் அம் மாணவன் ஆசிரியர் கூறும் எந்தவொரு வீட்டுப் பாட வேலையையும் ஒரு நாள் கூட செய்து வரத் தவறியதே இல்லை.

### கீதம்பாமாலை

— யாழ்ராஜ் —

## ஞாயிற்றுக்கிழமை தந்த அமெரிக்காவின் ஒருநாள் ஜனாதிபதி

அமெரிக்காவின்பனின்ரெண்டாவது ஜனாதிபதியாக 'விக்' கட்சியைச் சேர்ந்த ஜக்கரி டெயிலர் என்பவர் தெரிவு செய்யப்பட்டார்.

பதினோராவது ஜனாதிபதியாகவிருந்த ஜேம்ஸ் நக்ஸ் போக் என்பவரின் பதவிக்காலம் 3-3-1849 அன்று முடிவடைந்தது. மறுநாள் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பன்னிரெண்டாவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட டெயிலர் பதவிப் பொறுப்பை ஏற்க வேண்டியிருந்தது. ஆனால் மார்ச் 4 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையாக இருந்ததால் டெயிலர் அத்தினத்தில் பதவி ஏற்க மறுத்துவிட்டார்.

பதவிக்காலம் முடிவடைந்ததனால் முன்னைய ஜனாதிபதி ஒரு நாள் கூட பதவியில் நீடிக்க முடியாதவாறு அமெரிக்க அரசியல் சட்டம் அமைந்திருந்தது.

ஒரு நாள் கூட ஜனாதிபதி இல்லாமல் ஆட்சி அமையக் கூடாது எனக் கருதப்பட்டது.

தவிர்க்க முடியாத சூழ்நிலையில் செனற் சபையின் தலைவர் ஜனாதிபதியாக பதவி ஏற்கலாம் எனச் சட்டம் கூறியது. இச்சட்டத்தைப் பயன் படுத்தி செனற் சபைத் தலைவராக இருந்த டேவிற் ரைஸ் அக்சிசன் என்பவர் 4-3-1849 இல் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். 24 மணி நேரம் ஜனாதிபதியாக

### ஒரு டசின் நாடுகளும் அவற்றின் நாடாளுமன்றங்களும் நாணயங்களும்

| நாடுகள் | நாடாளுமன்றம் | நாணயம் |
|---|---|---|
| 1) அப்கானிஸ்தான் | [illegible] | [illegible] |

ளும், கடைகளும் சேதங்க ளுக்குள்ளாகியுள்ளன.

இராணுவத்தினராலும், கொள்ளையர்களினாலும் சுமார் ஐம்பது கடைகளும், அதே அளவிலான வீடுகளும் உடைக்கப்பட்டு கொள்ளை யடிக்கப்பட்டுள்ளன.

வீடுகளிலும், கடைகளிலும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடும் இராணுவத்தினர் படகு தரைதட்டிக் கரை யொதுங்கியுள்ளது.

அதனை மீட்பதற்காகக் கடற்படைப் படகுகள் மேற் கொண்ட முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. தொடர்ந் தும் அதனை மீட்கும் வேலை யிலும் அதனைப் பாதுகாக் கும் பணியிலும் கடற்படை யினர் நயினாதீவுத் தென் கரையில் முயற்சியைத் தொடர்கின்றனர். (62)

## முதலாம் ஆண்டு
## நினைவஞ்சலி



## அருளம்பலம் குகபாலன்
(கப்டன் குட்டி அக்பர்)

பூவுலகில்: 19-05-1968 புகழுலகில்: 28-06-1989

### காலத்தோடு உன் புகழும் கலந்து நிற்கும்

மண் மீட்கப் புறப்பட்ட புலிகள் கூட்டம்
மானத்தை விட்டதில்லை; உயிரை ஈயும்!
கண்ணொத்த தமிழ்மாதை விலைக்கு விற்கும்
கயவர்தம் கும்பலைத்தான் ஒழிக்கவென்றே
விண்ணதிர செய்தவொரு வீரப்போரில்
வீழ்ந்தனனே குகபாலன் குட்டி அக்பர்
எண்ணமெல்லாந் துடிக்குமெங்கள் உடல் சிலிர்க்கும்!
இளவீரன் தியாகத்தை இயம்பலாமோ?
வெல்க புலிகள்! வாழ்க தமிழீழம் !!

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினரும்,
நண்பர்களும்.
(R/381)

# வெளிநாட்டுப் பாஸ்போட் உடையோர் வெளியேற முயற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கையரான சுமார் 50 பேர் வெளிநாடுகளில் வாழ்ந்த காரணத்தால் மலேசியா போன்ற நாடுகளின் கடவுச் சீட்டுகளுடன் யாழ்ப்பாணத் திலுள்ளார்கள். இவர்கள் தற் போது யாழ்குடா நாடெங்கும் நிலவும் பதற்றநிலை காரண மாக மனிதநேய ஸ்தாபனங்க ளின் உதவியுடன் வெளிநாடுக ளுக்குச் செல்லமுயற்சிப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அரிசி கையிருப்பில் உள்ளது; ஆனால் பெறமுடியாது உள்ளது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை களஞ்சிய அறையில் தற்போதைக்கு தேவையான அரிசி கையிருப் பில் உள்ளது. ஆனால் அப் பகுதியில் ஸ்ரீலங்கா ராணுவத் திற்கும், விடுதலைப் புலி களுக்கும் இடையில் மோதல் கள் நடைபெறுவதனால் களஞ்சிய அறைக்குச் சென்று தேவையான அரிசியை வெளியே எடுத்து வர முடிய வில்லை.

இதனாலேயே வடபகுதியில் அரிசி தட்டுப்பாட்டில் உள் ளது. தற்போதைய அரிசித் தட்டுப்பாட்டை நீக்குவதற் காக மூன்று மாதத்திற்குத் தேவையான அரிசியை கொழும்பில் இருந்து உடன் அனுப்பி வைக்குமாறு கொழும்பு உணவுக் கட்டுப் பாட்டு அதிகாரியிடம் கேட் கப்பட்டுள்ளதாக யாழ். அர சாங்க அதிபர் தெரிவித்தார். (ம)

# அகதிகளிடமிருந்து இரக்கமற்ற சுரண்டல்

(முல்லைத்தீவு)

திருக்கோணமலையிலிருந்து கால்நடையாக வரும் அகதி கள் புடவைக்கட்டு இறங்கு துறையைக் கடப்பதற்கு ரூபா 150 முதல் 200 ரூபா வரை வசூலிக்கப்படுகிறதாம். இதே வேளை திரியாயில் இருந்து காட்டுக்குள்ளாக நடந்து வந்து புல்மோட்டை-கொக் குத்தொடுவாய் பாதையைப் படகு மூலம் கடப்பதற்கு ரூபா 100 அறவிடப்படு கிறது. காசு இல்லாமல் படகில் ஏறிய சிலருக்கு ஓட் டிகள் அடித்ததாகவும் புகார் சொல்லப்படுகிறது.

இவ் வழிகளால் திருக்கோ ணமலையிலிருந்து சுமார் 8000 குடும்பங்கள் முல்லைத் தீவுக்கிராமங்களில் தஞ்சம டைந்துள்ளார்கள்.

## மாணவர் வராத
# பாடசாலைகளை மூடிவிட அதிபர்களுக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட பகுதியிலு ள்ள சில பாடசாலைகள் மூடப்பட்ட நிலையிலுள்ளன. ஆனால் சில பாடசாலைகளில் மாணவர் சமுகந்தராமல் ஆசி ரியர்கள் பாடசாலைக்குச் சென்று வரவுக்குறிப்பில்கைச் சாத்திட்டு வருகிறார்களாம்.

மாணவர்கள் வரவில்லாமல் பாடசாலையை நடத்துவது என்பது கல்விச் சேவைக்கும் பொருத்தமற்றது என்றும், இவ்வகையான பாடசாலைக ளை மூடி அதற்காக அறிவித் தலை வெளியிடுவதோடு, மூடிய பாடசாலைகள், இழந்த நாட்களை ஈடுசெய்வதற்கு சகஜநிலை திரும்பியதும் பதில் பாடசாலைகளை நடத்தலாம் என்றும் யாழ். கல்வித்திணை க்களம் அதிபர்களுக்குப் பணிப் புரை வழங்கியுள்ளது.

## உண்ணாவிரதம் தொடர்கிறது

(வல்வெட்டித்துறை)

தேவரையாளி நரசிம்மர் ஆலயத்தில் புலிகளின் வெற் றிக்காக வேண்டி உண்ணா விரதமிருக்கும் திருமதி நவரத்தினம் இராஜேஸ்வரி (வயது 40) என்னும் பெண் மணிக்கு மக்கள் பஜனை, தேவாரம் போன்றவைகள் மூலம் உற்சாகமளித்து வருகின் றார்கள்.

மேற்படி பெண்மணி கடந்த ஜூன் 22 வெள்ளிக்கிழமை முதல் உண்ணாவிரதமிருந்து வருகின்றார்; (68)

அமெரிக்காவின்பனிரெண் டாவது ஜனாதிபதியாக 'விக்' கட்சியைச் சேர்ந்த ஜக்கரி டெயிலர் என்பவர் தெரிவு செய்யப்பட்டார்.

பதினோராவது ஜனாதிபதி யாகவிருந்த ஜேம்ஸ் நக்ஸ் போக் என்பவரின் பதவிக் காலம் 3-3-1849 அன்று முடி வடைந்தது. மறுநாள் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பன்னி ரெண்டாவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட டெயி லர் பதவிப் பொறுப்பை ஏற்க வேண்டியிருந்தது. ஆனால் மார்ச் 4 ஆம் திகதி ஞாயிற் றுக் கிழமையாக இருந்ததால் டெயிலர் அத்தினத்தில் பதவி ஏற்க மறுத்துவிட்டார்.

பதவிக்காலம் முடிவடைந்த தனால் முன்னைய ஜனாதி பதி ஒரு நாள் கூட பதவியில் நீடிக்க முடியாதவாறு அமெ ரிக்க அரசியல் சட்டம் அமைந் திருந்தது.

ஒரு நாள் கூட ஜனாதிபதி இல்லாமல் ஆட்சி அமையக் கூடாது எனக் கருதப்பட்டது.

தவிர்க்க முடியாத சூழ் நிலையில் செனற் சபையின் தலைவர் ஜனாதிபதியாக பதவி ஏற்கலாம் எனச் சட் டம் கூறியது. இச்சட்டத் தைப் பயன் படுத்தி செனற் சபைத் தலைவராக இருந்த டேவிற் ரைஸ் அக்சிசன் என் பவர் 4-3-1849 இல் ஜனாதி பதியாகப் பதவி ஏற்றார். 24 மணி நேரம் ஜனாதிபதியாக இருந்தார்.

மறுநாள் பன்னிரெண்டா வது ஜனாதிபதியாக டெயிலர் பதவியேற்றார். எனவே ஒரு நாள் ஜனாதிபதி மற்றைய ஜனாதிபதிகளை விடப் பிர பல்யமானார். இவர் இறந்த பின்னர் ''பிளாட்ஸ்'' என்ற இடத்தில் இவரது முழு உரு வச் சிலை திறந்து வைக்கப் பட்டது. அதில் ''அமெரிக்கா வின் ஒரு நாள் ஜனாதிபதி'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒரு டசின் நாடுகளும் அவற்றின் நாடாளுமன்றங்களும் நாணயங்களும்

| | நாடுகள் | நாடாளுமன்றம் | நாணயம் |
|---|---|---|---|
| 1) | ஆப்கானிஸ்தான் | ஷோரா | ஆப்கனி |
| 2) | ஈரான் | மஜ்லிஸ் | ரியால் |
| 3) | இஸ்ரேல் | நெஸ்ஸட் | பவுண் |
| 4) | நேபாளம் | பஞ்சாயத் | ரூபா |
| 5) | கி. ஜேர்மனி | ஃபோக்ஷாமா | மார்க் |
| 6) | மே. ஜேர்மனி | புண்டஸ்டாக் | மார்க் |
| 7) | ஆர்ஜென்ரீனா | ஜெஷனஸ்சாங்கிரஸ் | பிசோ |
| 8) | சீனா | பீப்பிள்ஸ்காங்கிரஸ் | யுவான் |
| 9) | ருமேனியா | நஷனல்அசெம்பிளி | லெவ் |
| 10) | போலந்து | செஜிப் | ஜியோடி |
| 11) | ஜப்பான் | டயட் | யென் |
| 12) | ரஷ்யா | சுப்ரிம்சோவியம் | ரூபிள் |

# கடல் கன்னிகளும் கடல் மனிதர்களும்

நம்மவர்கள் கடல் தேவதை கள் என அழைக்கும் கடல் கன்னி, கடல் மனிதர் பற்றி பல்வேறு விதமான கதைகள் உள்ளன.

வடபுலத்தின் மன்னார் பகுதிகளில் ஆழ்கடலுக்கு அட்டைத் தொழிலுக்கு செல் வோர் இத்தகைய பிராணி களை அபூர்வமாக சில சந்த ர்ப்பங்களில் கண்டுள்ளார்கள். கடல் கன்னிகளைப் பற்றி கேள்விப்பட்டிராத நமது கடல் தொழிலாளர்கள் அவ ற்றைக் கண்டுமோகினிப் பேய் கள் எனப்பயந்துள்ளார்கள்.

16 ஆம் நூற்றாண்டில் இலங் கையின் கடற்கரையில் வந்து ஒதுங்கிய கடற் கன்னி ஒன்று பிடிக்கப்பட்டு போர்த்துக் கேய ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. போர்த் துக்கேய டாக்டர் ஒருவர் கடல் கன்னியை பார்வை யிட்டபின்னர் கடல் கன்னி மனித இனத்தைச் சார்ந்தது எனக் கூறியுள்ளார்.

15 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கல் நாட்டில் இரு ந்து கீழைத்தேய நாடுகளுக்கு பயணம் செய்த வஸ்கொட காமா என்ற பயணி கடல் கன்னிகளைக் கண்டுள்ளான். இவன் அவற்றைக் கடல் தேவ தைகள் என கூறியுள்ளான்.

கிறிஸ்தோப்பர் கொலம்பஸ் என்பவன் தான் 1493 ஜன வரி 4 ஆம் திகதி வெள்ளிக் கிழமை 3 கடல் கன்னி களைக் கண்டதாக தனது குறிப்பில் கூறியுள்ளான்.

மென்மையான குரலில் பாடும் கடல் கன்னிகள் கரை க்கு வந்தால் உயிர்வாழாதாம் கரைக்கு வந்ததும் கண்ணீர் சொரியும். உடலைக் குளிர்ச்சி யாக வைத்துக்கொள்ளவே இவ்வாறு கண்ணீரை வெளி யேற்றுகிறதாம்.

கடல் கன்னியை ஆராய்ந்த ஹில்ஸ், றொபேட் ஆகிய விஞ் ஞானிகள் கடல் கன்னியின் உடலமைப்பைப் பற்றி விளக் கியுள்ளனர்.

கடல் கன்னியின் முதுகும் மார்பும் பெண்களைப் போல வும் உடல் பொதுவாக மனி தர்களைப் போலவும், வால் பகுதி முதலையைப்போல வும் தோல் மிக மென்மை யானதாகவும். கூந்தல் கருமை நிறம் கொண்டதாகவும் காணப்படுகிறதாம்.

இக் கடல் கன்னிகள் நடன மாடிக் கொண்டும் கூந்தல் களை அதன் கைகளினால் வருடிக்கொண்டு லாவகமாக தாவித்தாவிச் செல்லுமாம்.

கடல் மனிதனைப் பற்றி யும் ஆராயப்பட்டுள்ளது. கடல் மனிதனின் மேற்புறம் மனிதனைப் போலவும் கீழ்ப் பகுதி மீனின் காலைப் போல வும் காணப்படுவதாகக் கூறப் படுகின்றது.

# இங்கிலாந்து யூகோஸ்லாவியா வெற்றி

செவ்வாயன்று இரண்டாம் கட்டப்போட்டியின் இறுதி ஆட்டங்கள் இரண்டு நடை பெற்றன.

முதலாவது ஆட்டத்தில் ஸ்பானியாவை, யூகோஸ்லா வியா 2 - 1 என்ற கோல் வித்தி யாசத்தில் தோற்கடித்தது. இன்னொரு ஆட்டத்தில் இங்கி லாந்து பெல்ஜியத்தை 1 - 0 என்ற கோல்கணக்கில் தோற் கடித்தது.

இதனடிப்படையில் யூகோஸ் லாவியாவும், இங்கிலாந்தும் கால்இறுதிப்போட்டிகளுக்குத் தகுதி பெறுகின்றன. ஸ்பானி யாவும், பெல்ஜியமும் போட் டிகளிலிருந்து நீக்கப்படுகின் றன.

இதுவரையில் நடைபெற்ற இரண்டாம் கட்டப் போட்டி களின் மூலம் எட்டு அணிகள் கால் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளன. கால்இறு திப் போர்ட்டிகள் ஜூன் 30, ஜூலை 1, ஆகிய தினங்களில் நடைபெறும்.

### கால்இறுதி ஆட்டங்கள்

ஜூன் 30 ஆர்ஜென்ரீனா - யூகோஸ்லாவியா, அயர்லா ந்து - இத்தாலி;

ஜூலை 1 செக்கோஸ்லா வியா - மே ஜேர்மனி, கமரூன்- இங்கிலாந்து.

### சிந்தனைக்கு

அநீதியைத் தாங்குபவனைவிட, அநீதி இழைப்பவனே என்றும் அதிக அவதியுறுவான்

– பிளேட்டோ

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 28-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## பயங்கரமான ஆயுதம்

"உலகத்திலே பயங்கரமான ஆயுதம் எது?"

"நிலைகெட்டுப்போன நயவஞ்சகரின் நாக்குத்தான் அது"

தமிழ்த் திரைப்படமொன்றில் வரும் காட்சியில் ஒரு பாடலில் இடம்பெற்ற கேள்வியும் பதிலுமே மேலே உள்ளவை.

சிறிலங்கா சிங்கள அரசின் ஜனாதிபதியும் அவரது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் கொட்டும் வார்த்தைகள் நிலைகெட்டுப்போன நயவஞ்சகரின் நாக்காகவே பயங்கரமான ஆயுதமாக இருக்கிறது.

தமிழ் மக்களுக்கு எதிராக அரசு போர் தொடுக்கவில்லையென்றும் விடுதலைப்புலிகளுக்கெதிராக போர் நடைபெறுவதாகவும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கூறிவருகிறார்.

பொதுமக்கள் வாழும் பகுதிகளில் தாக்குதல் நடத்தவேண்டாமென்று உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்புப்படைகள் பொதுமக்கள் வாழும் இடங்களைத் தவிர்த்துப் புலிகளின் முகாம்கள் மீதே தாக்குதல் நடத்துவதாகவும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் கூறுகிறார்.

யாழ்ப்பாணக் கோட்டைக்குள்ளிருக்கும் பாதுகாப்புப் படையினருக்கு உணவும் மருந்துகளும் கொடுப்பதற்கு கோட்டையைச் சுற்றி நிற்கும் புலிகள் தடையாக இருப்பதால் புலிகளின் அந்த நிலைகளை நிர்மூலமாக்குவதற்காகவே குண்டு வீசப்பட்டதென்றும் ஹெலியிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டதென்றும் பாதுகாப்பு அமைச்சு குண்டுவீச்சையும் தாக்குதலையும் ஒப்புக்கொண்டிருக்கிறது.

ஆனால் கோட்டைப் பகுதிக்கு வீசப்பட்ட குண்டுகளும் ஹெலித்தாக்குதலும் யாழ்நகர் பிரதான பஸ்நிலையப் பகுதியையும் நவீன சந்தைக் கட்டிடத்தையும் கோட்டையிலிருந்து தூரத்திலுள்ள சிவன்பண்ணைவீதி, முட்டாஸ் கடைச்சந்தி, மனோகரா தியேட்டர் சந்தி ஆகிய இடங்களிலுள்ள கடைகள் வீடுகளைத் தரைமட்டம் ஆக்கியது பற்றி பாதுகாப்பு அமைச்சு வாய்திறக்கவில்லை.

கோட்டையிலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள கொக்குவில் புகையிரதப் பகுதியில் ஹெலி அடித்த ஷெல்லுக்கு ஏழு வயதுச் சிறுவன் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு அப்பாவி உயிர்கள் பலிகொள்ளப்பட்டது பற்றி பாதுகாப்பு அமைச்சு ஒன்றும் சொல்லாது;

கோட்டைக்குள்ளிருக்கும் சில படையினருக்காக எத்தனை அப்பாவி உயிர்களைப் பலியெடுக்க இனவாத சிறிலங்கா சிங்கள அரசு திட்டமிட்டிருக்கிறது?

கல்முனையில்நாற்பத்தாறுதமிழர்எரிக்கப்பட்டுள்ளனர்.

திருமலையில் அரிசி ஆலையில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருந்தவர்கள் மீது குண்டு வீசித்

# விடுதலைப் புலிகள் ஜே. வி. பி. அல்ல

**எம். கே. சவிரிமுத்து**

ஜே.வி.பிக்கு ஏற்பட்ட கதிதான் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்படுமென ரஞ்சன் விஜேரத்தினா கூறியுள்ளார். அந்த தோட்ட முதலாளிக்கு அரசியல் அகரவரிசை சற்றும் தெரியாது போலுள்ளது, ஜே. வி. பி. இயக்கத்தினுடைய அரசியல் கொள்கை, இராணுவ நடவடிக்கை, அதற்கிருந்த மக்கள் ஆதரவு என்பன வேறு வகைப்பட்டது. ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலை வேறு வகைப்பட்டது. 1968 ஆம் ஆண்டிலிருந்து ஜே. வி. பி. என்றொரு இயக்கம் உருவாகியிருந்தது. இது தனது சிறுபிள்ளைத்தனமான இராணுவநடவடிக்கைகளின்மூலம், 1971 ஆம் ஆண்டு தனது ஆயுதப் போராட்டத்தை வெளிக்காட்டியது. அதன் முற்றிலும் பிழையான அரசியல், இராணுவ கண்ணோட்டத்தின் விளைவாக ஒரு சில மாதங்களுக்குள்ளேயே ஸ்ரீமாவோ அரசாங்கம் இவ்வியக்கத்தை தோற்கடித்துவிட்டது.

இதன்பின்பு 1978 ஆம் ஆண்டின முற்பகுதியில் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டதாக அறிவித்துவிட்டு, சட்டபூர்வ பாராளுமன்ற அரசியலில் அது பிரவேசித்தது. 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில், அதன் தலைவர் றோகணவிஜேவீர போட்டியிட்டு சில ஆயிரக்கணக்கான வாக்குகளைப் பெற்று அதன் மூலம் மக்கள் ஆதரவு இல்லையென்பது வெளிப்பட்டது. ஆயுதப் போராட்டத்திலும், தோல்வியுற்ற அவ் இயக்கம், பாராளுமன்ற பாதையிலும் போட்டியிட்ட இவ்வியக்கம் தனக்கு எவ்வித பலமும் இல்லையென்பதை வெளிக்காட்டியது. 1983 ஆம் ஆண்டு ஜே. ஆர். அரசாங்கம் தமிழீழ மக்களுக்கெதிராக சட்டவிழ்த்துவிட்ட இனக்கலகத்தின்வெட்கத்தை, திசை திருப்புவதற்காக, அதன் பழியை ஜே.வி.பியின் தலையில் போட்டு அவ்வியக்கத்தைத் தடை செய்தது. இதன் பின்பு தலைமறைவான இவ்வியக்கமானது 1987 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் வரை, காத்திரமான அரசியல், இராணுவ நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடவில்லை.

இந்திய இராணுவத்தின் பிரசன்னமும், இவ்வியக்கத்தினது இந்திய எதிர்ப்பும் சிங்கள இளைஞர்களை ஓரளவு கவர்ந்தது. இக்காலகட்டத்தில் யு. என். பி. அரசாங்கத்திற்கெதிரான போராட்டத்தில் மாணவ, இளைஞர்களின் ஆதரவுடன், இவ்வியக்கம் அன்று முனைப்புப்பெற்றது. காலம், காலமாக சிங்கள மக்கள் மத்தியில் வேரூன்றியிருந்த இந்திய எதிர்ப்பு வாதமும், இவ்வியக்கத்தின் முனைபபுக்கு பின்புலமாய் அமைந்திருந்தது.

இந்திய எதிர்ப்பில் ஜே. வி. பியை விட தீவிர எதிர்ப்பை பிறேமதாஸா காட்டியதாலும், இந்திய இராணுவம் வெளியேறும் என்ற நிலைமை ஓரளவு உறுதிப்பட்ட சூழலிலும், ஜே. வி. பிக்கு எதிரான நடவடிக்கைகளை அரசு செய்வது சாத்தியமானதாக இருந்தது. இந்திய இராணுவம் வெளியேறுமென சிங்கள மக்கள் நம்பியதாலும், மக்கள் மத்தியில் ஜே. வி பியின் சினமூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டதாலும், மக்கள் ஆதரவு பெருமளவு குறைந்திருந்தது. இச் சூழலில் ஜே வி. பி. அழிவதற்கான அடிப்படை வாய்ப்பொன்று தென்பட்டது. மேலும் ஜே. வி. பி. இராணுவ ரீதியாக பலம் வாய்ந்த இயக்கமல்ல. இராணுவத்தை தடுத்து நிறுத்தக்கூடிய அளவிற்கு, அதன் நடமாட்டத்தை கட்டுப்படுத்தக் கூடியளவிற்கு கண்ணிவெடி வைக்கும் கலையில் கைதேர்ந்தவர்களு ல்ல ஏனைய இராணுவ நடவடிக்கைகளில் அவர்கள் பலம் பெற்றிருக்கவுமில்லை. இலங்கை இராணுவம் இவர்களை முற்றுகையிட்ட காலத்தில், இராணுவத் தொடர் வண்டிளை தாக்கும் வல்லமையை இவர்கள் பெற்றிருக்கவில்லை. நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் ஜே. வி பி. உறுப்பினர் ஒருவர் இருப்பதாக அறியவந்தால், சாதாரண பொலிஸ் படையினரே அவரின் மறைவிடத்திற்கு சென்று இலகுவாக கைது செய்ய கூடிய முறையில் தான் ஜே, வி. பி. யின் பலம் இருந்தது.

றோகண விஜேவீராவின் மறைவிடத்தை இராணுவத்தினர் அறிந்ததும், இரண்டு வாகனங்களில் மட்டுமே அவர்கள் அம் மறைவிடத்திற்கு சென்றனர். வீட்டில் முகச்சவரம் செய்துகொண்டிருந்த றோகணவிஜேவீராவை எவ்வித ஆயுத ரீதியான எதிர்ப்பும் அற்ற நிலையில் மிக இலகுவாக கைது செய்தனர். இந்த அளவிற்குதான் ஜே.வி. பியின் ஆயுதபலம் இருந்ததென்பதை நாம் நோக்க வேண்டும். எனவே அரசியல் இராணுவ கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, ஜே.வி. பியை அழித்ததுபோல, விடுதலைப் புலிகளை அழித்துவிட முடியாதென்பது ஒரு சிறு பிள்ளைக்குக்கூடத் தெரியும். இது ரஞ்சன் விஜேரதனாவிற்கு தெரியாதிருக்கின்றது என்றால் அது ஆச்சரியத்திற்குரியதே.

இன்னும் சற்றும் ஆழமாக அரசியல் ரீதியில் நோக்குவோமேயானால் இன்னுமோர் உண்மை புலனாகும். 1968 ஆம் ஆண்டிலிருந்து 1987 ஆம் ஆண்டுகால ஜே. வி. பியின் 20 வருடகால வரலாற்றில் அதனால் ஒரு முனைப்புப் பெற்ற இயக்கமாக இருக்க முடியவிலை ஆனால் இலங்கை இந்திய ஒப்பந்தம் இலங்கையில் இராணுவ பிரசன்னம் என்பனவற்றின் அடிப்படையிலான இந்திய எதிர்ப்பு வாதமே இது முனைப்பு பெறுவதற்கான அடித்தளமாக அமைந்திருந்தது. இந்த வகையில் இந்திய இராணுவத்தைவெளியேற்றுதல்என்ற கோரிக்கையின் அடிப்படையில் தான் அது வளர முடிந்தது என்பதை நாம் கவனிக்க வேண்டும். ஆனால் இந்திய இராணுவம் வெளியேறுவது என்ற நிலை ஊர்ஜிதமான பின்பும் அது வெளியேறிய பின்பும் இதனிடம் ஒரு பலமான கோரிக்கை இல்லை. இச்சூழலில் ஜே. வி. பி.யின் தேவை அவசியமற்றதாகிவிட்டது.

ஆனால் அதே வேளை தமிழீழ மக்களின் நிலை அவ்வாறானது அல்ல. தீர்க்கப்படாத அவர்களது கோரிக்கைக்கு விடுதலைப் புலிகள் தலைமை தாங்குகின்றார்கள். எனவே விடுதலைப் புலிகளுக்குமுனைப்பானகோரிக்கை கையிலுண்டு. ஆதலினால் அவர்கள் அரசியல் ரீதியில் பலம் பொருந்தியசூழலிலேயே காணப்படுகின்றார்கள். சாதாரணமாக ஓர் இராணுவ தொடர்வண்டியை தாக்க முடியாததும் அடிப்படையில் பலமான கோரிக்கையில்லாததுமான ஜே. வி. பி. யையும் பலம் பொருந்திய அரசியல் ரீதியான கோரிக்கை உள்ளதும் அதற்கு மக்கள் மத்தியில் ஆதரவுள்ளதும் அதே வேளையில் இராணுவ முகாம்களை தாக்கக் கூடியதும் கட்டுப்படுத்தக் கூடியதுமான பலம் பொருந்திய விடுதலைப் புலிகளையும் ஒப்பீடு செய்வது ரஞ்சன் விஜேரத்னாவின் சிறுபிள்ளைத்தனத்தை விடவேறு எதனை வெளிக்காட்டுகின்றது?

# ஆக்கிரமிப்பு பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும்

(டப்ளின்)

பலஸ்தீன மக்களோடு அரசியல் சமத்துவத்தை ஏற்படுத்த இஸ்ரேல் உடன்படுவதுடன், ஆக்கிரமிப்பு பிரதேசங்களிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் பிரிட்டிஷ் பிரதமர்

பிரிட்டிஷ் பிரதம மந்திரி இக் கருத்தினை வலியுறுத்தினார்.

சோவியத் யூதர்களை இஸ்ரேலில் குடியேற்றுவதை உடன் நிறுத்த வேண்டும் என்றும் ஐரோப்பிய பொருளாதார சமூக அங்கத்துவ நாடுகள் கேட்டுக்கொண்டன.

## தட்சர் வலியுறுத்து

நாட்டில் சோவியத் யூனியனுக்கு உதவி வழங்க வேண்டும என்ற மேற்கு ஜேர்மனியின் கோரிக்கையை பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஏற்றுக்கொள்ளவில்லை

தினார். அத்துடன் தான் 3000 மில்லியன டொலரை சோவியத் யூனியனுக்கு வழங்கப்போவதாகவும் குறிப்பிட்டார்.

சில உடன்பாடுகள் சோவியத்யூனியனுக்கு வழங்கப்படவிருக்கும் பொருளாதார உதவி குறித்து ஏற்பட்டது. ஐரோப்பிய சமூக அமைப்பு சோவியத் யூனியனின் உடனடித் தேவைகள் என்ன? நீண்டகாலத்தேவைகள் என்ன? என்பன பற்றி ஆராய்ந்து உதவி வழங்கும்படி கூறினால் சோவியத் யூனியனுக்கு வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் தென் ஆபிரிக்காவைப்பொறுத்து பிரிட்டிஷ்பிரதமமந்திரியின் கருத்து நிராகரிக்கப்பட்ட அதே வேளை தென்னாபிரிக்க காங்கிரஸ்தலைவர் நெல்சன் மண்டேலாவின் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஹெலித்தாக்குதலும் யாழ்நகர் பிரதான பஸ்நிலையப் பகுதியையும் நவீன சந்தைக் கட்டிடத்தையும் கோட்டையிலிருந்து தூரத்திலுள்ள சிவன்பண்ணைவீதி, முட்டாஸ் கடைச்சந்தி, மனோகரா தியேட்டர் சந்தி ஆகிய இடங்களிலுள்ள கடைகள் வீடுகளைத் தரைமட்டம் ஆக்கியது பற்றி பாதுகாப்பு அமைச்சு வாய்திறக்கவில்லை.

கோட்டையிலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள கொக்குவில் புகையிரதப் பகுதியில் ஹெலி அடித்த ஷெல்லுக்கு ஏழு வயதுச் சிறுவன் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு அப்பாவி உயிர்கள் பலிகொள்ளப்பட்டது பற்றி பாதுகாப்பு அமைச்சு ஒன்றும் சொல்லாது?

கோட்டைக்குள்ளிருக்கும் சில படையினருக்காக எத்தனை அப்பாவி உயிர்களைப் பலியெடுக்க இனவாத சிறிலங்கா சிங்கள அரசு திட்டமிட்டிருக்கிறது?

கல்முனையில்நாற்பத்தாறுதமிழர்எரிக்கப்பட்டுள்ளனர்.

திருமலையில் அரிசி ஆலையில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருந்தவர்கள் மீது குண்டு வீசித் தாக்கியதில் முப்பத்தைந்து தமிழர் கொல்லப்பட்டு இருக்கின்றனர்.

கடந்த பதினைந்து நாட்களில் வடக்கிலும் கிழக்கிலும் ஆயுதப்படைகளினால் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கைபற்றி பாதுகாப்பு அமைச்சு வாய் திறக்கவில்லை. காயமடைந்தவர்கள் ஊனமுற்றவர்கள் பற்றி எதுவுமே தெரியாது!

போர் தொடங்கிய நாளிலிருந்து வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு உணவுப் பொருள்கள், எரிபொருள்கள், மருந்துவகைகள் எதுவும் அனுப்பப்படவில்லை

தனியார் தமது முயற்சியில் கொண்டுவரும் பொருள்களும் வழிப்பறி செய்யப்படுகின்றன.

அதாவது தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா சிங்கள இனவாத அரசு பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை மேற்கொண்டு இருப்பதாகவே தோன்றுகிறது.

ஆயுதப் படைகளைக் கொண்டும், சிங்களக் காடையர்களுக்கு ஆயுதம் கொடுத்தும், பொருளாதாரத் தடைகளை மேற்கொண்டும் தமிழ் இனத்தை அழிப்பதில் சிறிலங்கா சிங்கள அரசு திட்டமிட்டுத் தீவிரமாகச் செயல்படுகிறது.

இதேசமயம் தமிழ் மக்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டப்படவில்லையென்றும் தமிழ்ப் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தவில்லையென்றும் வெளிஉலகுக்கு எடுத்துக் காட்டுவதற்கு ஜனாதிபதியும் அவர் தம் சீடர்களும் நயவஞ்சகமாகத் தேனொழுகப் பேசுகிறார்கள்.

நிலை கெட்டுப் போன நயவஞ்சகரின் நாக்கு அவர்களையே சூழ்ந்து அறுக்கவும் காலம் வரலாம்.

## ஜப்பான் சர்வதேச அரசியலில் தீவிரமாக ஈடுபடவுள்ளது

(டோக்கியோ)

சர்வதேச அரசியலில் ஜப்பானின் பங்கு பணியை விரிவாக்கவும் தீவிரமாக ஈடுபடவும் ஆயத்தமாக இருப்பதாக ஜப்பான் அறிவித்துள்ளது.

அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையேயுள்ள சம நிலையை சார்ந்து உலக நாடுகள் இருந்து வருவதால் அரசியல்ரீதியில் இதற்கு இப்போது வாய்ப்பில்லை என்றும் தெரிவித்துள்ளது.

ஆனால் பெரிய வல்லரசுகளின் மோதல்போக்கு நின்றவுடன் ஜப்பான் இதில் ஈடுபடும் என்றும் ஜப்பான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐரோப்பாவில் சமாதானத்தை நிலவ முடிந்தாலும் ஆசியாவில் சமாதானம் ஏற்படுவது கடினம் என்றும் குறிப்பிட்ட ஜப்பான் கம்போடிய நெருக்கடிகளை தீர்ப்பது ஜப்பானின் தலையாய கடமை என்றும் தெரிவித்துள்ளது.

### இயக்குநர் சபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் இயக்குநர் சபைக் கூட்டம் நேற்று நல்லூர் பலநோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

## ஆக்கிரமிப்பு பிரதேசங்களிலிருந்து

# இஸ்ரேல் வெளியேற வேண்டும்

(டப்ளின்)

பலஸ்தீன மக்களோடு அரசியல் சமத்துவத்தை ஏற்படுத்த இஸ்ரேல் உடன்படுவதுடன், ஆக்கிரமிப்பு பிரதேசங்களிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரட் தட்சர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் அயர்லாந்தில் இடம்பெற்ற ஐரோப்பிய பொருளாதார சமூகநாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு பேசிய பிரிட்டிஷ் பிரதம மந்திரி இக்கருத்தினை வலியுறுத்தினார்.

சோவியத் யூதர்களை இஸ்ரேலில் குடியேற்று வதை உடன் நிறுத்தவேண்டும் என்றும் ஐரோப்பிய பொருளாதார சமூக அங்கத்துவ நாடுகள் கேட்டுக்கொண்டன.

சோவியத் யூதர்களை குடியேற்ற உரிமை இருப்பதைப் போலவே பலஸ்தீனிய மக்களுக்கும் உரிமை உண்டு எனவும் மார்கிரட் தட்சர் கூறினார்

இதேவேளை இம் மாநாட்டில் சோவியத் யூனியனுக்கு உதவி வழங்க வேண்டும் என்ற மேற்கு ஜேர்மனியின் கோரிக்கையை பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஏற்றுக்கொள்ளவில்லை

### தட்சர் வலியுறுத்து

கட்டுக்கோப்பு இல்லாத பொருளாதார அமைப்பைக் கொண்டுள்ள சோவியத் யூனியனுக்கு பொருளாதார உதவி வழங்கினால் அது வீணாகிப் போய்விடும் என்றும் கூறினார்.

ஆனால் மேற்கு ஜேர்மனியின் ஜனாதிபதி கோல், இப்பொழுதான நாம் முக்கியமாக சோவியத் யூனியனுக்கு பொருளாதார உதவி வழங்க வேண்டும் என வலியுறுத்தினார். அத்துடன் தான் 3000 மில்லியன டொலரை சோவியத் யூனியனுக்கு வழங்கப்போவதாகவும் குறிப்பிட்டார்.

உதவி குறித்து ஏற்பட்டது. ஐரோப்பிய சமூக அமைப்பு சோவியத் யூனியனின் உடனடித் தேவைகள் என்ன? நீண்டகாலத்தேவைகள் என்ன? என்பன பற்றி ஆராய்ந்து உதவி வழங்கும்படி கூறினால் சோவியத் யூனியனுக்கு வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் தென் ஆபிரிக்காவைப்பொறுத்து பிரிட்டிஷ்பிரதமமந்திரியின் கருத்து நிராகரிக்கப்பட்டஅதே வேளை தென்னாபிரிக்க காங்கிரஸ்தலைவர் நெல்சன் மண்டேலாவின் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## வெளிநாட்டு உதவி குறித்து ஈரானில் கருத்து வேறுபாடு

(தெஹ்ரான்)

ஈரானில் ஏற்பட்ட இயற்கை அழிவுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்த மீட்புப் பணிகள் யாவும் முடிவடையும் நிலையில் உள்ளதாக உத்தியோக பூர்வ வட்டாரங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் ஆயிரக்கணக்கான சடலங்கள் மண் சரிவுகளுக்குள் புதைந்து கிடப்பினும் கூட அவைகளை மீட்பது முடியாத காரியம் எனறு அம் முயற்சியைக் கைவிடும் நிலையை ஈரான் மேற்கொண்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் வகையில் ஆகாய மார்க்கமாக ஹெலிகொப்டர், விமானங்கள் உதவியுடன் கிருமி நாசினி மற்றும் இரசாயனங்கள் தெளிக்கும் வேலையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை தொடர்ந்து வெளிநாடுகளிலிருந்து வந்து கொண்டிருக்கும் உதவிகளை பெற்றுக் கொள்ளுவதில் ஈரானிய வெளியுறவு அமைச்சுக்கும், தீவிர இஸ்லாமிய மதக் கோட்பாட்டாளர்களுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் நிலவி வருகின்றது குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன், ஈராக் ஆகிய பகைமை நாடுகளிடமிருந்து வரும் உதவிகள் குறித்தே இந்தக் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

சகல வெளிநாட்டு உதவிகளை மனப் பூர்வமாக வரவேற்பதாக ஈரானிய வெளியுறவு அமைச்சு தெரிவித்திருக்கும் இதேவேளையில் தீவிர இஸ்லாமிய மதக் கோட்பாட்டாளர்கள் அமெரிக்கா உதவி எனற போர்வையில் சில உதவிகளை அளித்த போதும் ஈரானின் பலகோடி ரூபாய்கள் பெறுமதிமிக்க சொத்துக்களை முடக்கி வைத்திருப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

## ஜனாதிபதி வெங்கட்ராமனுடன் கலைஞர் 30 நிமிட சந்திப்பு!

(சென்னை)

தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி இந்தியஜனாதிபதி திரு. வெஙகடராமனை சென்னையில் சந்தித்தார். சுமார் முப்பது நிமிட நேரம் இச்சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு ஜனாதிபதி திரு வெங்கட்ராமன் தற்பொழுது சென்னை வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி - முதல்வர் சந்திப்பில் இலங்கைப்பிரச்சினை இடம் பெற்றிருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது.

## இலங்கை அரசுக்கு பாக். உதவி; தகவல் இல்லை; இந்தியா அறிவிப்பு

(டில்லி)

இலங்கை அரசு தமிழர் பிரதேசங்களில் மேற்கொண்டிருக்கும் போர் நடவடிக்கைகளை மேலும் உக்கிரப்படுத்தும் வகையில் பாகிஸ்தானிடமிருந்தோ அல்லது வேறு நாடுகளிலிருந்தோ உதவி கேட்டிருப்பதாக வந்துள்ள செய்திகள் குறித்து சரியான தகவல்கள் எதுவும் இதுவரை தமக்கு கிடைக்கவில்லைஎன்று இந்தியா கூறியுள்ளது.

இந்திய வெளியுறவு உயர் அதிகாரி ஒருவர் புதுடில்லியில் இலங்கை நிலைமைகள் குறித்து நிருபர்கள் மத்தியில் தகவல் வெளியிடுகையிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது தற்பொழுது மேற்கொண்டிருக்கும் யுத்தத்தில் பாகிஸ்தான் இராணுவம் பயன்படுத்தப்படலாம் என்றும் இந்த நடவடிக்கை இந்து சமுத்திர பிராந்தியத்தின் அமைதி நிலைக்கு ஆபத்தாகலாம் என்றும் முன்னாள் பிரதமர் திரு ராஜீவ் காந்தி சில தினங்களுக்கு முன்பு இந்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருப்பதுடன் அச்சம் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

திரு. ராஜீவ்காந்தியின் இந்த அச்சம் தொடர்பாக பதில் அளிக்கும் பொழுதே இந்திய வெளியுறவு உயர் அதிகாரி மேற்கண்ட இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தான் விமானம் அத்துமீறல்; ஆப்கானிஸ்தான் ஆட்சேபனை

(காபூல்)

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானுக்கு தனது கடுமையான ஆட்சேபனையையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானிய விமானங்கள் தொடர்ந்து ஆப்கானிஸ்தானின் ஆகாயப் பிராந்தியத்தில் அத்துமீறல் சம்பவங்களை மேற்கொண்டுவருவதன் நிமித்தமே இந்த ஆட்சேபனையும், கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காபூலில் உள்ள பாகிஸ்தானிய தூதுவரிடம் ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சினால் இந்த ஆட்சேபனை நேரடியாக தெரிவிக்கப்பட்டதாக கூறப்பட்டது

கடந்த இரண்டு தினங்களில் மாத்திரம் பாகிஸ்தானிய விமானங்கள் இரண்டுமுறை ஆகாயப் பிராந்தியத்தில் அத்துமீறல்நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது இவ்வாறு அத்துமீறல் நடத்தியது போர் விமானமா அல்லது உளவு விமானமா என்பது குறித்து எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

## பங்களாதேஷில் வெள்ளம், 3 லட்சம் பேர் பாதிப்பு!

(டாக்கா)

பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமைகளின் நிமித்தம் இருபதுக்கு மேற்பட்ட கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன் ஏறக்குறைய மூன்று லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பங்களாதேஷின் வடமேற்குப் பிரதேசமான போக்கிரா மாவட்டததில் பாய்ந்தோடும் யமுனை நதி பெருக்கெடுத்துள்ளதுடன் பாரிய அணைக்கட்டுக்கள் உடைக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த அழிவுகள் ஏற்பட்டுள்ளன. இரண்டு நாட்கள் தொடர்ச்சியான மழையே யமுனை நதி பெருக்கெடுப்புக்கான காரணமாகும்.

இந்த வெள்ள நிலைமைகளின் நிமித்தம் ஏறக்குறைய இருபதாயிரம் மக்கள் எவ்வித வெளியுலக தொடர்பும் அற்ற நிலையில் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பலர் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுவதுடன் பயிர்கள் யாவும் பெருமளவில் அழிந்து பாரிய பொருளாதார சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

## இன்று சமாச கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கும் சங்கங்களின் சமாச கூட்டம் இன்று நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் காலை நடைபெறும்.




# வட-கிழக்கில் இராணுவம் மக்களை பாதுகாக்கிறது என்கிறார் பிரேமதாசா

(கேகாலை)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மக்களைப் பாதுகாக்கவும், நாட்டின் ஐக்கியத்தைப் பேணுவதற்கும் ஆயுதப்படையினர் போராடிவருகின்றனர்.

இது இன ரீதியான நடவடிக்கையல்ல. இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கேகாலையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கூறினார்.

தற்போது உள்ள பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் எவருடனும் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு தயாராகவுள்ளது. ஆனால் இதனை அரசின் பலவீனம் என்று எவரும் கருதிவிடக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

யுத்தநிலைமைகள் மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். நாம் இன்று எதிர்நோக்குவது பொருளாதாரப் பிரச்சினை என்று சொல்வதை விட தார் மீகப் பிரச்சினை என்று கூறுவதே பொருத்தமானது என்றார்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பல்வேறு சமூகங்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். வடக்குக் கிழக்குப் பகுதி நெருக்கடி நிலைமைகளை கூடிய விரைவில் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிகாரிகள் இனமத வேறுபாடு இன்றி தத்தமது கடமைகளை செய்யவேண்டும். கிராமங்களை அபிவிருத்தி செய்ய கிராம சேவையாளர் ஒத்துழைக்க தேண்டும்.

தகைமை, இனவிகிதாசாரத்துக்கு அமைய வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன இவ்வாறு அவர் கூறினார்,

## வவுனியாவில் பீப்பாக்குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தமிழ்மக்கள் நெருக்கமாக வாழும் கிராமப் பகுதிகளில் விமானத்திலிருந்து பீப்பாக் குண்டுகள் போடப்பட்டன.

இந்தக் குண்டுவீச்சுச் சம்பவத்தில் எவரும் பாதிக்கப்படவில்லையென்று அறியப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமை காலை (24·06·90) திடீரென்று நெளுக்குளம், பம்பைமடு பகுதி கிராமங்களுக்கு மேலால் பறந்துசென்ற விமானம், மூன்று பீப்பாக் குண்டுகளை வீசின. இவை தரிசுநிலங்களில் விழுந்து வெடித்ததாகக் கூறப்பட்டது.

செவ்வாய்க்கிழமை காலை வவுனியா சேமமடு பகுதியில் அவ்ரோ விமானத்திலிருந்து இரு பீப்பாக்குண்டுகள் போடப்பட்டன. இந்த விமானத்தாக்குதலில்எவரும்பாதிக்கப்படவில்லை என்று தெரியவருகிறது.

இதேசமயம், வவுனியா நகரப் பகுதியிலிருந்து ஷெல்தாக்குதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் காரணமாக ஏராளமான வீடுகள் பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளன. (தி)

## வவுனியாவில் 50,000 பேர் அகதிகளாயினர்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் தமிழ் அகதிகளின் தொகை அதிகரித்திருப்பதாக அகதிகளை பார்வையிட்டு அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வரும் வவுனியா கச்சேரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாதர்பணிக்க மகிழாய்குளம், கொந்தக்காரன்குளம், பன்றிக்கெய்த குளம், சேமமடு, மாளிகை நொச்சிக்குளம், இறம்பைக்குளம், கோவில் புதுக்குளம் ஆகிய கிராமங்களிலும் வேறுபல கிராமங்களிலும் தமிழ் மக்கள் அகதிகளாக தங்கியிருப்பதாகஅவர் தெரிவித்தார்.

## யாழ். செஞ்சிலுவைச் சங்கம் முல்லைத்தீவு அகதிகளுக்கு மருந்து அனுப்புகின்றது

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது தடவையாக முல்லைத்தீவு மாவட்டப் பகுதியில் உள்ள அகதிமுகாம்களுக்கு நாளை யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தில் இருந்து மருந்துகளும், உணவுப் பொருட்களும், அனுப்பிவைக்கப்படவுள்ளது. இவற்றுடன் வைத்தியர்களும், செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களும் செல்வார்கள்.

முல்லைத்தீவு. மாவட்டப் பகுதிகளிலுள்ள அகதி முகாம்களுக்கு முதற்கட்டமாக 25. 6. 90 அன்றுமருந்துகளும் உணவுப் பொட்டலங்களும் அனுப்பிவைக்கப்பட்டது. இவற்றுடன் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களும் அனுப்பிவைக்கப்பட்டனர். முதல் அனுப்பப் பட்டது பற்றாக்குறை ஏற்பட்டதனாலேயே நாளை இரண்டாவதுதடவையாக அனுப்பப்படவுள்ளது. முதல் கட்டத்தின் போது புதுக்குடியிருப்பு, உடையார் கட்டு, குமுள முனை, செம்மலை, அலம்பில் ஆகிய பகுதிகளில் உள்ள 627 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரம் அகதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது, மேலும் முள்ளியவளை, வற்றாப்பளை, கொக்குத் தொடுவாய் பகுதிகளில் உள்ள அகதி முகாம்களுக்கு இன்று செல்வார்கள். (ம)

## மக்கள் வங்கிக் கிளை ஆவணங்களுக்கு சேதமில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற பொம்பர், ஷெல் ...

முகாமையாளர்தெரிவித்தார்.

இத்தாக்குதல்களினால் கூரைகளும், தளபாடங்களும் ...

## களவிற்கு காவல் நின்ற இராணுவம்மீது தாக்குதல்

ஸ்ரீலங்கா இராணுவத்தின் மீது நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

சம்பவதினம் தமிழரின் தோட்டத்தில் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் சிங்களவர்களில் பலர் வெங்காயம் பிடுங்கிக் கொண்டிருந்தனராம். அத்தோட்டத்திற்குரிய தமிழ்க்குடும்பம் அகதியாகசில தினங்களுக்கு முன்னர் வெளியேறியதைத் தொடர்ந்து இராணுவத்தினரின் பாதுகாப்புடன் நெடுங்குளம் பகுதியைச் சேர்ந்த சிங்கள மக்கள் வெங்காயம்பிடுங்கி வருகிறார்களாம்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை வெங்காயம் பிடுங்கிக் கொண்டிருந்தவர்களுக்குபாதுகாப்பு வழங்கிய இராணுவத்தினரைநோக்கியே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினார்கள்.

இத்தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

புலிகளின் இத்தாக்குதல்சம்பவத்தை அடுத்து ஹெலிகொப்ரர் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. இதில் எவரும் பாதிக்கப்படவில்லை என்று அறியப்படுகிறது.

வவுனியாவில் தமிழ் மக்கள் அகதிகளாக வெளியேறிய இடங்களில் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் சிங்களக் காடையர்கள் திருட்டுவேலைகளில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (தி)

### தமிழரைக்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த இருநூற்றி ஐம்பது பேர் தமிழ் நாட்டுக்கு அகதிகளாக வந்துள்ளனர் என்றும் அவர் நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களில் நாலாயிரத்து நூற்றி தொண்ணூற்றிஒருபேர் இலங்கையிலிருந்து அகதிகளாக வந்துள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

இவர்களில் ஆயிரம்பேர் ...

### ஆஸ்பத்திரி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

க்கப்பட்ட பின்பே திறக்கப்படும் திகதி, ஏனைய விபரங்கள் பற்றி தெரிவிக்கப்படும் என்றும், இவ்வைத்திய சாலைகளில் வெளிநாடுகளில் இருந்துவரும் செஞ்சிலுவைச் சங்க வைத்தியர்களும் சேவையிலீடுபடுவார்கள் எனவும் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

## மின்சாரம் துண்டிப்பு

நல்லூரில் அகதிகள் தங்கியிருந்த பகுதிகளை நோக்கி நேற்று மாலை ஆறுமணியளவில் தாக்குதல் நடாத்தப்பட்டதை தொடர்ந்து யாழ் நகர பகுதிகளில் மின்சாரம் முற்றாக துண்டிக்கப் பட்டது.

ஹெலித் தாக்குதலில் மின்சாரக் கம்பிகள் துண்டிக்கப்பட்டதே இதற்கு காரணம் என தெரியவருகிறது. (லோ)

## போக்குவரத்து வசதி செய்யலாம்

கடமையாற்றும் பகுதிகளுக்கு போக்குவரத்து வசதியீனம் காரணமாகச் செல்ல முடியாத வைத்தியர்கள், தாதிகள், சுகாதார ஊழியர்கள் போன்றோர் தமது கடமையிடங்களுக்கு செல்ல விரும்பினால் அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் செய்து தரப்படும் என யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (மு)

## கட்டுப்படுத்த முடியாதாம்

பாக்கு நீரிணையில் விடுதலைப்புலிகளின் அதிவேகபடகுகளை இங்கு பாதுகாப்பில்ஈடுபடும் இந்திய கடற்படை கப்பல்களால் முற்றாக கட்டுப்படுத்த முடியாதுள்ளது என்று இந்திய கரையோர பாதுகா...

நெளுக்குளம், பம்பைமடு பகுதி கிராமங்களுக்கு மேலால் பறந்து சென்ற விமானம், மூன்று பீப்பாக் குண்டுகளை வீசின. இவை தரிசுநிலங்களில் குதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் காரணமாக ஏராளமான வீடுகள் பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளன. (தி)

# வவுனியாவில் 50,000 பேர் அகதிகளாயினர்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் தமிழ் அகதிகளின் தொகை அதிகரித்திருப்பதாக அகதிகளை பார்வையிட்டு அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வரும் வவுனியா கச்சேரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது வவுனியா மாவட்டத்தில் ஐம்பது ஆயிரம் மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி கோயில்களிலும் பாடசாலைகளிலும் அகதிகளாகத் தங்கியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

ஓமந்தை பகுதியில் மட்டும் நான்கு இடங்களில் அகதிகளுக்கான முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அவர், சாஸ்திரி கூழாங்குளம், ஈச்சங்குளம், கல்மடு, கிடாச்சூரி, தவசியாகுளம், இரணை இலுப்பைக்குளம், கோதண்டர் நொச்சிக்குளம், பூவரசங்குளம், நெளுக்குளம், பம்பைமடு, தாண்டிக்குளம், மருக்காரம்பளை, பேயாடி கூழாங்குளம், கோழியாகுளம் மாதர்பணிக்க மகிழாய்குளம், கொந்தக்காரன்குளம், பன்றிக்கெய்த குளம், சேமமடு, மாளிகை நொச்சிக்குளம், இறம்பைக்குளம், கோவில் புதுக்குளம் ஆகிய கிராமங்களிலும் வேறுபல கிராமங்களிலும் தமிழ் மக்கள் அகதிகளாக தங்கியிருப்பதாகஅவர் தெரிவித்தார்.

அகதிகளாக இருக்கும் மக்களுக்கு உணவுப் பிரச்சினையுடன், சுகாதாரப் பிரச்சினையும் ஏற்பட்டிருப்பதாகவும் வைத்தியர் பற்றாக் குறையினால் நோயாளிகள் சிகிச்சை பெறுவதில் பெரும் சிரமம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

இதே சமயம் புதுக்குளம் கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் அப்பகுதி அகதி மக்களுக்கென நடமாடும் சிகிச்சைநிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வவுனியா அரசாங்க வைத்திய சாலை செயலிழந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (தி)

# யாழ்ப்பாணத்தில் 38,000 குடும்பங்கள் இடம் பெயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சுமார் 38,000 குடும்பங்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்புக் காரணமாக ஒதுங்கியுள்ளார்கள் என்று உத்தியோகப் பற்றற்ற மதிப்பீடு ஒன்று தெரிவிக்கின்றது. இவர்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். ஏனையோர் உற்றார், உறவினருடன் வாழ்ந்து வருகிறார்களாம்.

இதே வேளை யாழ் குடா நாட்டில் உள்ள பதினான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, யாழ். நகர உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பருத்தியடைப்பு, நெருஞ்சிமுனை ஆகிய இடங்களிலிருந்து பலர் பாதுகாப்பு காரணமாக வெளியேறி உள்ளார்கள்.

# தெங்கு - பனம்பொருள் சங்கங்களின் பணம் கையாடல்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, கற்சிலைமடு தெங்கு பனம் பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பற்று வரவுக் கணக்கை கணக்குப் பரிசோதகர்கள் கடந்த வாரம் பார்த்த சமயம் பணம் கையாடப்பட்டமை வெட்ட வெளிச்சமாகியுள்ளது. இதே வேளை கணக்கில் பல மோசடிகளும் உள்ளதாம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தெங்கு பனம் பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது கள் உற்பத்தியில் மட்டும்தான் ஈடுபட்டுள்ளன. சங்கங்களின் தொழிற்பாடு மட்டுப்படுத்தப்பட்ட இவ்வேளையில் படித்தவர்கள் என்றழைக்கப்படும் சிலரால் சங்கங்கள் சுரண்டப்படுகின்றன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

படவுள்ளது. இவற்றுடன் வைத்தியர்களும், செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களும் செல்வார்கள்.

முல்லைத்தீவு மாவட்டப் பகுதிகளிலுள்ள அகதி முகாம்களுக்கு முதற்கட்டமாக 25. 6. 90 அன்றுமருந்துகளும் உணவுப் பொட்டலங்களும் அனுப்பிவைக்கப்பட்டது. இவற்றுடன் செஞ்சிலுவைச் சங் கட்டு, குமுள முனை, செம்மலை, அலம்பில் ஆகிய பகுதிகளில் உள்ள 627 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரம் அகதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது, மேலும் முள்ளியவளை, வற்றாப்பளை, கொக்குத் தொடுவாய் பகுதிகளில் உள்ள அகதி முகாம்களுக்கு இன்று செல்வார்கள். (ம)

# மக்கள் வங்கிக் கிளை ஆவணங்களுக்கு சேதமில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற பொம்பர், ஷெல் தாக்குதலினால் சேதமுற்ற நவீன சந்தை மக்கள் வங்கிக் கிளையில் வாடிக்கையாளர்களின் ஆவணங்கள் சேதமுறவில்லை என அவ்வங்கி முகாமையாளர்தெரிவித்தார்.

இத்தாக்குதல்களினால் கூரைகளும், தளபாடங்களும் சேதமுற்றாலும் ஆவணங்கள் சேதமடையவில்லை எனவும் இதனால் மக்கள் பீதியுற வேண்டாம் எனவும் முகாமையாளர் குறிப்பிட்டார்.

அதே வேளை வெகு விரைவில் இக்கிளை கன்னாதிட்டி மக்கள் வங்கி அமைந்திருக்கும் கட்டிடத்தின் மேல்மாடியில் இயங்கும் எனவும் தெரிவித்தார்.

## அகதி முகாம் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும், மண்ணெண்ணெய் இல்லாமையினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது என அம் முகாம்களைப் பராமரித்து வரும் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (மு)

## திருமலை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலை நகர்ப் பகுதியில் ஒரு குடும்பத்தில் தாயும் தந்தையும் இராணுவத் தாக்குதல்களின் போது தமது ஒன்றரை வயதுக் குழந்தையை தாய் தூக்குவார் என தந்தையும், தந்தை தூக்குவார் என தாயும் நம்பி இருவருமே திருக்கோணமலையில் விட்டு விட்டு முல்லைத்தீவு கரையில் வந்து நின்று அழுதவண்ணம் உள்ளனர்.

படகுகளில் வந்துகொண்டிருந்த சமயம் ஹெலித்தாக்குதலால் உயிரிழந்த குழந்தையைத் தான் காயமடைந்து விட்டபோதிலும் தனது மடியிலேயே வைத்துக்கொண்டு கரையேறிய ஒரு தாயும் தற்போது முல்லைத்தீவு அகதி முகாம் ஒன்றில் தஞ்சமடைந்துள்ளார். (லோ)

## சிறிலங்கா

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

யாது தடுத்து வருவதுடன் ஹெலி கொப்டர்களை அங்கு இறங்கவிடாது புலிகள் தாக்குதல் நடத்தி வருவதாகவும் தனது செய்தியில் அரசு கூறியுள்ளது.

மேலும் நேற்று முன்தினம் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கோட்டைத் தாக்குதலில் ஒரு இராணுவ அதிகாரி உட்பட நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் அரசு அறிவித்துள்ளது.

## நல்லூரில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளமாக காட்சியளித்தது நல்லூர் மடத்தில் ஹெலித் தாக்குதலால் காயமடைந்த சிறுபிள்ளை யொன்றின் மீது மின்கம்பி வீழ்ந்ததால் மூர்ச்சையுற்ற நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## இராணுவம் . . .

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தென்னை மரத்திலிருந்து வீழ்ந்த வயோதிபர் ஸ்தலத்திலேயே பலியானார்.

இந்த வயோதிபரின் இரு மகன்மார் 86ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப் பட்டது குறிப்பிடத்தக்கது. (தி)

## பஸ்மீது

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு முல்லைத்தீவு வழியாக நேற்று முன் தினம் இங்கு வந்து சேர்ந்தனர்.

இவர்கள் மட்டக்களப்பில் இருந்து புறப்பட்டு வாகரை, கதிரவெளி, வெருகல், மூதூர், ஆலங்கேணி, தம்பலகாமம், நிலாவெளி, திரியாய் ஊடாக முல்லைத்தீவுக்கு வந்து அங்கிருந்து இங்கு வந்தனர்.

இவர்களுடன் வந்த திருக்கோணமலையைச் சேர்ந்த சீதா, குணேஸ்வரி ஆகிய இருவரும் நடக்கமுடியாத நிலையில் பள்ளிக்குடியிருப்பிலும், சுன்னாகத்தைச் சேர்ந்த சிலோனி என்ற பயிற்சி ஆசிரியை தம்பலகாமத்திலும், றொபேர்ட், சிறிதரன் ஆகிய இருவரும் பள்ளிக்குடியிருப்பிலும் தங்கியுள்ளனர்.

ப்புடன் நெடுங்குளம் பகுதியைச் சேர்ந்த சிங்கள மக்கள் வெங்காயம்பிடுங்கி வருகிறார்களாம்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை வெங்காயம் பிடுங்கிக் அகதிகளாக வெளியேறிய இடங்களில் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் சிங்கள க் காடையர்கள் திருட்டுவேலைகளில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (தி)

## தமிழரைக்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த இருநூற்றி ஐம்பது பேர் தமிழ் நாட்டுக்கு அகதிகளாக வந்துள்ளனர் என்றும் அவர் நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களில் நாலாயிரத்து நூற்றி தொண்ணூற்றிஒருபேர் இலங்கையிலிருந்து அகதிகளாக வந்துள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

இவர்களில் ஆயிரம்பேர் தமிழ்ப் போராளிகள் எனத் தெரிவித்த அவர் காயமடைந்த போராளிகள் எந்தஅமைப்பாக இருந்தாலும் அவர்களை அகதிகள் முகாமில் வைத்தோ அல்லது மத்திய அரசுடன் பேச்சு நடாத்தியோ வேறு இடங்களில் தங்கவைத்து சிகிச்சை அளிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர் பற்றிய விபரங்கள் கிடைத்த பின்னர் மத்திய அரசுடன் ஆலோசனை நடாத்தி யார் தங்கியிருக்க தகுதி வாய்ந்தவர்கள், யார் தங்கத் தகுதியில்லாது வெளியேற்றப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்படும். இவ்வாறு முதல்வர் கூறினார்.

## நேற்று

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

600 ரூபா அறவிடப்பட்டது.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இருந்து நேற்றுக் கொழும்புக்கு மினி பஸ் சேவையை ஒலிம்பிக் புக்கிங் சென்ரர் நடாத்தியதாகத் தெரியவருகிறது.

மானிப்பாயில் இருந்து நல்லூர் வந்து நல்லூரிலும் பிரயாணிகளை ஏற்றிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

## ஹெலி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்தனர். குருநகர் தொடர்மாடிப் பகுதியில் காயமடைந்த யேசுதாஸன் அகஸ்ரீன் (வயது 38)என்பவர் கடற்கரை வீதி கோலிக்குறோஸ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

றெக்கிளமேசன், சென்ற லீஸ்ற் வீதி நல்லையா சின்னமணி என்பவரும் கையில் காயத்திற்கு உள்ளானர். (21)

## கண்ட

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லப்படுவதும் காயப்படுத்தப்பட்டும் வருகிறார்கள். இதனால் பகலில் மாத்திரமின்றி இரவிலும் மக்கள் பீதியுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

## ஆஸ்பத்திரி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

க்கப்பட்ட பின்பே திறக்கப்படும் திகதி, ஏனைய விபரங்கள் பற்றி தெரிவிக்கப்படும் என்றும், இவ்வைத்திய சாலைகளில் வெளிநாடுகளில் இருந்துவரும் செஞ்சிலுவைச் சங்க வைத்தியர்களும் சேவையிலீடுபடுவார்கள் எனவும் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். (மு)

## யாழ்நகர

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

நவீனசந்தை பகுதி கடைகளே இவ்வளவு காலமும் அகற்றப்பட்டு வந்தன. ஆனால் தற்பொழுது ஸ்ரான்லி வீதி கஸ்தூரியார் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள கடைகளும் மிகத் துரிதமாக அகற்றப்படுவது அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (லோ)

## வயோதிபர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மும், 100, குடும்பங்கள் தங்கியுள்ள பாசையூர் புனித அந்தோனியார் ஆலயமும் குறிப்பிடத்தக்கது

இச் சம்பவத்தை அடுத்து அங்கே தங்கியிருக்கும் அகதிகள் பீதி அடைந்துள்ளனர். (21)

யினம் காரணமாகச் செல்ல முடியாத வைத்தியர்கள், தாதிகள், சுகாதார ஊழியர்கள் போன்றோர் தமது கடமையிடங்களுக்கு செல்ல விரும்பினால் அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் செய்து தரப்படும் என யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (மு)

# கட்டுப்படுத்த முடியாதாம்

பாக்கு நீரிணையில் விடுதலைப்புலிகளின் அதிவேகபடகுகளை இங்கு பாதுகாப்பில்ஈடுபடும் இந்திய கடற்படை கப்பல்களால் முற்றாக கட்டுப்படுத்த முடியாதுள்ளது என்று இந்திய கரையோர பாதுகாப்பு தளபதி வைஸ் அட்மிரல் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

இந்திய இலங்கை எல்லையில் இந்திய கடற்படை ரோந்து பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும்அவர் மேலும் சொன்னார்.

## கொக்குவில்

பேரின் சடலங்களும் திருச்சபை ஆலயத்தில் வரிசையாக வைக்கப்பட்டிருந்த நெஞ்சை உருக்கும் சோகக்காட்சியை நூற்றுக்கணக்கானோர் சோகமேஉருவாகப் பார்த்துச் செல்வதை பார்க்க முடிந்தது.

மேற்படி ஹெலிக்குண்டுக் குப்பலியான அ. வசந்தகுமார் (வயது14), அ. அசோக்குமார் (வயது13), அ. செந்தில்குமார் (வயது10), அ. சுரேஸ்குமார் (வயது08) ஆகிய சகோதரர்களும், இவர்கள் தஞ்சம் புகுந்திருந்த வீட்டுக்காரர் கோமர் (வயது32) என்பவரும் அவரது இருபிள்ளைகளும் கொல்லப்பட்டனர். (21)

# மரண அறிவித்தல்

## திருமதி பூரணம் கந்தசாமி

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கை சேர்ந்த திருமதி பூரணம் கந்தசாமி 27 - 06 - 1990 அன்று காலமானார். இவர் திரு கந்தசாமியின் அன்பு மனைவியும், திருமதி தனலட்சுமி கனகசபை, விஜயகுமார், திருமதி ரதிலட்சுமி தவஞானம் (கனடா) சந்திரகுமார் (கனடா) ஜெயகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், கனகசபை, தவஞானம் (கனடா) திருமதி விக்னேஸ்வரி விஜயகுமார், குமுதினி (கனடா) ஜெயந்தி ஆகியோரின் அன்புமாமியும் சுமதி, சுகன்யா, சர்மிளா, சங்கீதா ஜனகன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் செந்தூரனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று ( 28 - 06 - 1990 ) வியாழக்கிழமை 11-00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

R/387 தம்பிஐயா கந்தசாமி